



சென்னையில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் விளையாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களை கோவை மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக், கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொ.பெ.ரவி, கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் ஆகியோர் சந்தித்து 'முரசொலி'க்கு தலா 350 சந்தாவிற்கான தொகையினை வழங்கினர்.



செங்கல்பட்டு மாவட்ட மக்கள் மற்றும் பள்ளி, கல்லூரி மாணவமாணவியர் பயன்பெறும் வகையில் மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழ்நாடு அறிவியல் இயக்கம், செங்கை பாரதியார் மன்றம் இணைந்து நடத்தும் செங்கை புத்தக திருவிழா–2023, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் துவக்கி வைத்தார். அருகில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் வரலட்சுமி மதுசூதனன், எஸ்.எஸ்.பாலாஜி, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் செம்பருத்தி துர்கேஷ், நகர மன்றத் தலைவர் தேன்மொழி நரேந்திரன் ஆகியோர் உள்ளனர்.

### எண்ணூர் வாயு கசிவு சம்பவம் எதிரொலி: அனைத்து தொழிற்சாலைகளிலும்

# வல்லுநர் குழு அமைத்து பாதுகாப்பு அம்சங்கள் குறித்து ஆய்வு!

## சுற்றுச் சூழல் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேட்டி!

புதுக்கோட்டை, டிச. 29 -

சென்னை எண்ணூர் அருகே பெரிய குப்பம் பகுதியில் உள்ள தொழிற்சாலையில் வாயு கசிவு ஏற்பட்டது குறித்து சுற்று சூழல் அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் கூறியதாவது: -

அமோனியா கசிவு ஏற்பட்ட நிலையில் 15 நிமிடத்தில் ஆலை நிர்வாகம் அதனை சரி செய்துள்ளது.

இந்த வாயு கசிவால் 18 பேர் பாதிக்கப்பட்டு சென்னை ஸ்டான்லி மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். உடனடியாக அப்பகுதிக்கு மாசு கட்டுப்பாட்டு அதிகாரிகள் சென்று, பரிசோதனை நடத்தினர். அப்போது அப்பகுதியில் பூஜ்யம் சதவீதம் அமோனியா இல்லை என்று கண்டறியப்பட்டது.

எனவே விபத்து ஏற்பட்ட போதிலும் அது உடனடியாக சரி செய்யப் பட்டது. அந்த தனியார் தொழிற்சாலை ரெட் கேட்டகிரியில் உள்ளது. இதேபோல ரெட் கேட்டகிரியில் இருக்கும் அனைத்து தொழிற்சாலைகளும், மறு ஆய்வுக்கு உட்படுத்தப்படும்.



அனைத்து பாதுகாப்பு அம்சங்களும் சரியாக உள்ளதா என்பது குறித்து ஆய்வு நடத்தப்படும். அதே சமயம் இதுபோன்ற விபத்துகள் ஏற்படும் போது, அதனை தடுக்க நவீன தொழில்நுட்ப அம்சங்கள் உடனடியாக பயன்படுத்தும் நிலையில் உள்ளதா என்பது குறித்து ஒரு குழு அமைத்து வல்லுனர்கள் உதவியுடன் ஆய்வு நடத்தப்பட உள்ளது.

இரவில் இருந்து மாசு கட்டுப்பாட்டு வாரிய அலுவலர்கள் அங்கு உள்ளனர்.

மேலும் அந்த தனியார் கம்பெனி தற்காலிகமாக மூடப்பட்டு உள்ளது. சல்ப்யூரிக் ஆசிட் பிளாண்ட் மட்டும் உடனடியாக மூட முடியாது என்பதால் படிப்படியாக மூடும் பணி நடைபெற்று கொண்டிருக்கிறது. எதிர் காலத்தில் இது போன்று விபத்துகள் நடைபெறாமல் இருக்க என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை விரைவில் அறிவிப்போம். அங்கு மட்டும் அல்லாமல், நிரந்தர தீர்வை எட்டும் வகையில் இந்த ஆய்வு தமிழ்நாடு முழுவதும் நடைபெறும்.

இவ்வாறு அவர் கூறினார்.


# திராவிட முழக்கம்

மாத இதழ்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

**வெளியீட்டு விழா**

நாள்: 29.12.2023 (வெள்ளிக்கிழமை)

நேரம்: மாலை 6 மணி

இடம்: முத்தமிழ்ப்பேரவை - TN இராஜரெத்தினம் அரங்கம்,
அடையாறு, சென்னை - 600 020.
பழைய சத்யா ஸ்டூடியோ எதிரில்.

முதல் இதழ் வெளியிட்டுச் சிறப்புரை:

**திரு. ஆ. இராசா, எம்.பி.**

பெற்றுக் கொள்பவர்:

மாண்புமிகு அமைச்சர்

**மனோ தங்கராஜ்**

வாழ்த்துரை:

திருமிகு **நக்கீரன் கோபால்**

வழக்கறிஞர் **அருள்மொழி**

திருமிகு **நவாஸ் கனி, எம்.பி.**

நடிகர் **இளவரசு**


### நல்லி குப்புசாமி தலைமை! தமிழ்நாடு ஒருங்கிணைந்த

# இசை வேளாளர் சங்கங்களின் கூட்டமைப்பு துவக்க விழா!

## ஆ.இராசா எம்.பி. – முன்னணியினர் பங்கேற்பு!

சென்னை, டிச.29-

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டில் இசை வேளாளர் முற்போக்கு நலச்சங்கத்தின் முப்பெரும் விழா - 24-ஆம் ஆண்டு விழா, தமிழ்நாடு ஒருங்கிணைந்த இசை வேளாளர் சங்கங்களின் கூட்டமைப்பு துவக்க விழா மற்றும் திருமண வரன் பார்க்கும் விழா நாளை (30.12.2023-சனிக்கிழமை) காலை 8.45 மணி முதல் 5 மணி வரை, சென்னை, ராஜா அண்ணாமலைபுரத்தில் அமைந்துள்ள முத்தமிழ்ப் பேரவை திருவாவடுதுறை டி.என்.ராஜரத்தினம் நினைவரங்கத்தில் நடைபெறுகின்றது.

காலை 8.45 மணிக்கு டி.எஸ்.பாண்டியன், டி. எஸ்.சேதுராம் குழுவினரின் நாதஸ்வர இசை மற்றும் கே.எஸ்.கண்ணன், கே.எஸ்.கே.மணிகண்டன், வி.எல்.ஹரிஷ் ஆகியோரின் சிறப்பு தவில் இசை கொண்ட மங்கல இசையுடன் விழா துவங்குகிறது.

விழாவிற்கு தொழிலதிபர் பத்மஸ்ரீ நல்லி குப்புசாமி தலைமை வகிக்கிறார்.

செம்பொன்னார் கோவில் எஸ்.ஆர்.ஜி. ராஜண்ணா, தொழிலதிபர்கள் ஆர்.இளங்கோவன், ராஜப்பா இளங்கோவன், ஆர்.பாலவேலாயுதம், தமிழ்நாடு அரசு மகளிர் மேம்பாட்டு நிறுவன நிதி ஆலோசகர் எஸ்.ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின்திருவுருவப்படத்தினை ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ.இராசா எம்.பி. சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு திறந்து வைக்கிறார்.

இசை வேளாளர் முற்போக்கு நலச்சங்கத்தலைவர் ந.மணிவண்ணன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

அச்சங்கத்தின் பொதுச் செயலாளர் வி.லட்சுமி நாராயணன் சங்க செயல்பாடு குறித்து விளக்கி பேசுகிறார்.

இசை வேளாளர் முற்போக்கு நலச்சங்க பொருளாளர் ஜி.பால்ராஜ் நிதி நிலை அறிக்கையை அளித்து பேசுகிறார்.

இவ்விழாவில் கலைஞர்கள், அறிஞர்கள், சாதனையாளர்கள் கௌரவிக்கப்படுகிறார்கள்.

உயர்நீதிமன்ற வழக்கறிஞர் - சட்ட ஆலோசகர் முத்தப்பன் நன்றி கூறுகிறார்.

அதனைத் தொடர்ந்து பிற்பகல் தமிழ்நாடு ஒருங்கிணைந்த இசை வேளாளர் சங்கங்களின் கூட்டமைப்பு துவக்க விழா நடைபெறுகின்றது.

இந்நிகழ்ச்சிக்கு இசை இன முரசு மாத இதழ் ஆசிரியர் சேது சொக்கலிங்கம் தலைமை வகிக்கிறார்.

தொழில் அதிபர் ஏ.பழனியப்பன் முன்னிலை வகிக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் திருக்கோஷ்டியூர் மணிகண்டன், பாகனேரி கார்த்திக், மதுரை சிதம்பர பாரதி, கும்பகோணம் சரவணன், விராலிமலை பூபாலன், சமயபுரம் சேது லட்சுமணன், கோவிலூர் திருநாவுக்கரசு, காரைக்குடி கதிர்வேல் மற்றும் இசை வேளாளர் சங்க நிர்வாகிகள் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

இசை வேளாளர் கௌரவ ஆசிரியர் டி.ஏ.வீரமணி நன்றி கூறுகிறார்.

## ஈரோடு – நெல்லை விரைவு ரெயில் சேவை செங்கோட்டை வரை நீட்டிப்பு!

நெல்லை, டிச. 29 –

நெல்லை – செங்கோட்டை வழித்தடத்தில் கடந்த சில ஆண்டுகளாக பாசஞ்சர் ரெயில்கள் மட்டுமே இயக்கப்பட்ட நிலையில், தற்போது பாலருவி தினசரி ரெயிலும், தாம்பரம், மேட்டுப்பாளையம் வாரம் ஒருமுறை செல்லும் எக்ஸ்பிரஸ் ரெயிலும் இயக்கப்பட்டு வருகின்றன.

இதற்கிடையில், ஈரோடு – நெல்லை விரைவு ரெயிலை செங்கோட்டை வரை நீட்டிக்க வேண்டும் என பல்வேறு தரப்பினர் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இந்நிலையில் ஈரோடு – நெல்லை விரைவு ரெயில் (16845) சேவையை செங்கோட்டை வரை நீட்டிக்க ரெயில்வே வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி, ஈரோட்டில் இருந்து மதியம் 2 மணிக்கு புறப்படும் ரெயில், இரவு 11.15 மணிக்கு செங்கோட்டையை சென்றடையும்.

செங்கோட்டையில் இருந்து காலை 4.50 மணிக்கு புறப்படும் ரெயில் (16846) ஈரோட்டை மதியம் 3 மணிக்கு சென்றடையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.





பல்லாவரம் சட்டமன்ற தொகுதி தாம்பரம் மாநகராட்சி மண்டலம்– 2 உட்பட்ட குரோம்பேட்டை காமராஜ்புரத்தில் மிக்ஜாம் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 2000 க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு அரிசி போர்வை பாய், தலையணை போன்றநல திட்ட. உதவிகளை பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி ஏற்பாடு செய்து வழங்கினார் மண்டல தலைவர் இ. ஜோசப் அண்ணாதுரை, மாமன்ற உறுப்பினர் ரேணுகாதேவி, வட்டக் கழகச் செயலாளர் பி.பரமசிவம், ஜி. கருணாமூர்த்தி ஆகியோர் உடன் இருந்தனர்.